# ஷர்ட் முதல் டோட் பேக் வரை

*ரொம்ப சுலபமா பழைய சட்டைலேந்து வேடிக்கையான, நல்ல டோட் பேக்-அ உருவாக்கலாம்.*

























## தேவைப்படும் பொருள்கள்


ரெண்டு முழுக்கை சட்டைகள். நாங்க இதுக்கு ஒரு கட்டம் போட்ட சட்டையும் பிளைன் சட்டையும் செலக்ட் பண்ணியிருக்கோம். சட்டை மீடியம் அல்லது லார்ஜ் சைஸ்ல இருக்கலாம்.
சாக்
கத்தரிக்கோல்
மணிகோர்த்த பின்ஸ்
மாட்சிங் நூல்
அப்புறம் ஒரு லூப் டர்னர்

வாங்க தொடங்கலாம்

ஒரு சட்டைய எடுத்து முழுசா ஓபன் பண்ணுங்க. சட்டையோட முன் பக்கம் உங்களை பாத்துட்டு இருக்க மாதிரி வைச்சிக்கோங்க இந்த பை தயாரிக்கறதை சுலபமாக்க நாங்க 16 இன்ஞ்ச் நீளமும் 15 இன்ஞ்ச் அகலமும் கொண்ட ஒரு டெம்ப்ளேடை தயார் செய்திருக்கோம். இப்ப டெம்ப்ளேட்டுக்கு அடியில பாக்கெட்ஸ் வர்ற மாதிரி இந்த சதுர டெம்ப்ளேட்டுக்கு சட்டை மேல வையுங்க. சட்டை மேல பேட்டனை வைக்கறப்ப, டெம்ப்ளேட்ட பாக்கெட் மேல வைச்சு அங்க போதுமான துணி, குறைஞ்சபட்சம் 2.5" இருக்கறதையும் அப்புறம் பக்கங்கள்ல 1" இருக்கறதையும் உறுதி செய்துக்கங்க. பாக்கெட் தேவை, பையோட பகுதியா அது இருக்கணுங்கறதை நினைவுல வைச்சிக்கோங்க டெம்ப்ளேட்ட சட்டை மேல பின் பண்ணுங்க. துணியோட ரெண்டு லேயரையும் சேர்த்து பின் பண்றீங்களான்னு பார்த்துக்கங்க. அது முடிஞ்சதும், சாக் எடுத்துட்டு துணி மேல டெம்ப்ளேட்ட அவுட்லைன் போட்டுக்கங்க. அப்றம் டெம்ப்ளேடிடுலிருந்து பின்-அ எடுத்துருங்க. இப்ப கத்தரிக்கோலை எடுத்துகிட்டு, துணில அவுட்லைனை கட் பண்ணிட்டு தனியா வெச்சிருங்க.

பையோட பெல்ட்டுக்காக, நாங்க 2 ½ இன்ஞ்ச் அகலத்தில இன்னொரு டெம்ப்ளேட்ட உருவாக்கியிருக்கோம். பெல்ட் டெம்ப்ளேட்டின் நீளமும் ஸ்லீவ் அளவும் ஒன்னா இருக்கும். இதுக்கு நமக்கு மூணு பீஸ் வேணும். ஸ்லீவ் மேல டெம்ப்ளேட்ட வைச்சு துணியோட ரெண்டு லேயரையும் சேர்த்து பின் பண்ணுங்க. சாக் வைச்சு அவுட்லைன் மார்க் பண்ணுங்க.டெம்ப்ளேட்டிலிருந்து பின்-அ எடுத்துருங்க. இப்ப கத்தரிக்கோலை எடுத்துகிட்டு, துணில மார்க் பண்ணின அவுட்லைனை கட் பண்ணுங்க. இப்ப நம்பகிட்ட ரெண்டு ஸ்ட்ரிப் தயார். அடுத்த ஸ்ட்ரிப்புக்கு, இதுல காட்டியிருக்க மாதிரி டெம்ப்ளேட்ட மீதி உள்ள துணியோட உடம்பு பகுதில வையுங்க... பின் பண்ணுங்க, மார்க் பண்ணுங்க, பின்-அ எடுத்துருங்க அப்புறம் கட் பண்ணுங்க.

சுருக்கமா சொல்லணும்னா, இப்ப நம்பகிட்ட பைக்கு 2 செவ்வக பீசஸ் அப்றம் பையோட பெல்ட் அல்லது ஹான்டிலுக்கு மூணு ஸ்ட்ரிப்ஸ்-ம் இருக்கு.



















இதே ஸ்டெப்ஸ இன்னொரு சட்டைக்கும் ரிபீட் பண்ணனும்.

முன்னாடி மாதிரியே ரெண்டு செவ்வக பீசஸ் அப்புறம் ஹான்டிலுக்கு மூணு ஸ்ட்ரிப்ஸ் ரெடி பண்ணனும். முதல்ல ஹான்டில்ச பின் பண்ணனும். முதல் ரெண்டு ஸ்ட்ரிப்ஸ்சோட டாப்-அ ரைட் சைட் ஃபேஸ் பண்ற மாதிரி ஜாயின்ட் பண்ணிட்டு இதுல காட்டியிருக்க மாதிரி பின் பண்ணுங்க. இப்ப ரெண்டாவது ஸ்ட்ரிப்போட அடிப்பகுதிய எடுத்து அதை இதுல காட்டியிருக்க மாதிரி, திருப்புங்க அது ரெண்டாவது ஸ்ட்ரிப்போட பாட்டம் மூணாவது ஸ்ட்ரிப்போட ரைட் சைட் டாப்போட மேட்ச் ஆகும், இப்ப இவற்றை ஒன்னா பின் பண்ணுங்க.

இப்ப சதுர பீசஸ்க்கு போகலாம். இதை ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வைச்சு வீடியோல காட்டியிருக்க மாதிரி நாலு மூலைகளையும் பின் பண்ணுங்க. அதே மாதிரி மேல் பாகத்த தவிர சதுரத்த சுற்றிலும் தைக்கணும், ஆனா தைக்கும்போது சுமார் 3 அங்குலத்துக்கு ஒரு ஓபனிங்க வைக்கணுங்கறதை மறக்காதீங்க, அப்பதான் பைய திருப்ப முடியும். சாக்-அ வைச்சிட்டு ஓபனிங்க மார்க் பண்ணுங்க.

இப்ப செக்ட் ஷர்ட்ட பாக்கலாம். பிளைன் ஷர்ட் பீசஸ் மாதிரியே ரெண்டு மெல்லிசான ஸ்ட்ரிப்ஸ்சோட டாப்-அ ரைட் சைட், ரைட் சைட்-அ ஃபேஸ் பண்ற மாதிரி ஜாயின்ட் பண்ணிங்க. நடு ஸ்ட்ரிப் பாட்டமை எடுத்துகிட்டு, ரைட் சைட், மூணாவது ஸ்ட்ரிப்போட ரைட் சைட்-அ ஃபேஸ் பண்ற மாதிரி மடிங்க. டாப்-அ பின் பண்ணுங்க. சதுர பீசஸ்லயும் இதையே ரிபீட் பண்ணுங்க. ரைட் சைட், ரைட் சைட்-அ ஃபேஸ் பண்ற மாதிரி வைச்சிகிட்டு நாலு மூலைகளையும் பின் பண்ணுங்க. குறிப்பு- இந்த பீசுக்கு 3 அங்குல இடைவெளி விட தேவையில்லை.

விரிவான கட்டிங் மற்றும் ஃபினிஷ்ங்குக்கு அப்புறம் இப்ப தைக்க தொடங்கணும். செக்ட் துணிய உஷா ஜானோம் அல்லூர் டி.எல்.எக்ஸ் தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. சதுர பீஸ் எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடியில வையுங்க. பேட்டன் செலக்டார் டயலை 'ஏ'க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணுங்க. சீரான வேகத்தோட தைக்கத் தொடங்குங்க. நாம மூணு பக்கத்தை மட்டும் தைச்சிட்டு டாப்-அ ஓபனா விடணுங்கறதை மறக்காதீங்க. மூலைக்கு வரும்போது தைக்கறதை நிறுத்திட்டு நூலை கட் பண்ணிட்டு தொடர்ந்து தையுங்க. இது முடிஞ்சதும், வீடியோல காட்டியிருக்க மாதிரி துணி விளிம்புல நூல் பிரிஞ்சு வர்ற இடத்துல கட் பண்ணிருங்க. இதுவரை நாம பக்கங்களையும் பாட்டமையும் தைச்சாச்சு டாப்ல ஓபனா விட்ருக்கோம். இது முடிஞ்சதும், வீடியோல காட்டியிருக்க மாதிரி துணி விளிம்புல நூல் பிரிஞ்சு வர்ற எடத்துல கட் பண்ணிருங்க. இதுவரை நாம பக்கங்களையும் பாட்டமையும் தைச்சாச்சு டாப்ல ஓபனா விட்ருக்கோம்.
இப்ப பின் பண்ணின ஸ்ட்ரிப்ப எடுத்துகிட்டு வீடியோல காட்டி இருக்க மாதிரி ஒரு முனைய தையுங்க, ஆரம்பத்துலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட மறக்காதீங்க. இன்னொரு பக்கத்தையும் தைச்சிட்டு பின்-அ நீக்கிருங்க. இப்ப பாருங்க நாம மூணு ஸ்ட்ரிப்ஸ்யும் ஒன்னா ஜாயின் பண்ணிட்டோம்.

அடுத்து, பிளைன் ஷர்ட்டை எடுத்துக்கொங்க ஒரு பக்கத்தில தைக்க ஆரம்பிங்க ஆனா பைய வெளிப்பக்கமா திருப்ப மார்க் பண்ணிண 3 அங்குல இடைவெளிய தைக்கக்கூடாதுன்னு நினைவு வைச்சிக்கொங்க நூலை கட் பண்ணிட்டு இன்னொரு மார்கிலிருந்து தைக்க கட்பண்ணிடுங்க மூலை வரை தொடர்ந்து தைச்சிட்டு நூலை
அடுத்த ரெண்டு பக்கங்களையும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இவற்றை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி மூலைக்கு வந்து சேர்ற வரை தையுங்க.










டாப்-அ தைக்காம விட்ரணுங்கறதை மறக்காதீங்க. பாருங்க இடைவெளிலயும்கூட தைக்காம விட்ருக்கோம்.

பின் பண்ணின பிளைன் ஸ்ட்ரிப்ப எடுத்துகிட்டு கட்டம் போட்ட ஸ்ட்ரிப் மாதிரியே பின் பண்ணின விளிம்பை தையுங்க. தைச்சிட்டே பின்-அ நீக்கிருங்க. ஸ்ட்ரிப் மாதிரியான சின்ன விஷயத்துக்குகூட பேக்- ஸ்ட்ரிச் ரொம்ப முக்கியம். நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும்.

இப்ப ரெண்டு ஸ்ட்ரிப்ஸயும் அடுத்தடுத்து வையுங்க. பிளைன் கலர் ஸ்ட்ரிப்ப செக்ட் ஸ்ட்ரிப் மேல ரைட் சைட், ரைட் சைட்-அ பாக்கற மாதிரி வையுங்க. மூலைகளை சரியா மாட்ச் பண்றதை உறுதி செய்துக்கங்க. மாட்ச் பண்ணின ஸ்ட்ரிப்ப பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி நீளமான பக்கத்தில தையுங்க. முனை வரை தொடர்ந்து தையுங்க. கிடைமட்ட முனைய விட்டுட்டு அடுத்த பக்கத்தை தைக்க ஆரம்பிங்க. நூலை கட் பண்ணுங்க. இது முடிஞ்சதும், லூப் டர்னரை எடுத்துகிட்டு தைக்காம விட்ட கிடைமட்ட பக்கம் வழியா ஸ்ட்ரிப்புக்குள்ள நுழைச்சு, தைக்காம விட்ட இன்னொரு பக்கத்துக்கு அது வர்ற வரை துணிய பின்நோக்கி புஷ் பண்ணிட்டே போங்க. இப்ப, இதுல காட்டியிருக்க மாதிரி லூப்-அ துணில ஹூக் பண்ணிட்டு லூப் டர்னரை வெளிய இழுங்க. இப்ப உங்களால ஸ்ட்ரிப்ப சுலபமா வெளிய திருப்ப முடியணும்.

இப்ப நாம சீம்ஸ ஃபிளாட்டன் பண்ணி பை ஹாண்டிலுக்கு ஒரு நேர்த்தியான தோற்றத்தை தரணும். கிரீசஸ நீக்கி மடிப்பை செட் பண்ண ஸ்ட்ரிப்ப அயர்ன் பண்ணனும். அயர்ன் பண்ணின பிறகு வெளி ஸ்ட்ரிப் எவ்வளவு கிரிஸ்பாவும் சுத்தமாவும் இருக்கு பாருங்க. இப்ப பெல்ட்டுக்கு ஒரு எட்ஜ் ஸ்ட்ரிச் கொடுக்கணும் இப்ப மெயின் பேக்-அ பாக்கலாம், நாம தைச்சுருக்கற ரெண்டு சதுர பீஸ்களை எடுத்து ஒன்னு பக்கத்தில இன்னொன்னை வையுங்க. செக்ட் பீசோட விளிம்புகளை நாம தைச்சிட்டோம், இப்ப தைக்காத பக்கத்தை எடுத்துகிட்டு துணிய புரட்டி திருப்புங்க, விளிம்புகள்ல கவனமா இருக்கணும். நேர்த்தியான ஃபினிஷிங் வர கார்னர்களை புஷ் பண்ணுங்க.






அப்றம் இதுல காட்டியிருக்க மாதிரி பிளைன் லைனிங் துணிய எடுத்துகிட்டு அதுக்குள்ள செக்ட் துணிய ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி வையுங்க. பையோட ஸ்ட்ராப்-அ உள்ள செக்ட் துணி மேல புஷ் பண்ணுங்க. இப்ப மூணு லேயர்ஸ எப்படி வைச்சிருக்கோம்னு பாக்கலாம். லைனிங் துணியோட சீம்-அ ஸ்ட்ரிப்போட ஒரு முனையோட மேட்ச் பண்ணுங்க அதுக்கு அப்புறம் மெயின் பேக் துணியோட சீம்-அ லைனிங் துணி பேக்-ன் சைட் சீம்கூட மேட்ச் பண்ணி அதை ஸ்ட்ரிப்போட நடுப்பகுதி மேல வைங்க. இப்ப துணில மூணு அடுக்குகள் வந்திருக்கும். இவற்றை ஒன்னா சேர்த்து பின் பண்ணுங்க. இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்ட்ரிப் லைனிங் பை அப்புறம் மெயின் பை துணிக்கு நடுவுல வந்திருக்கணுங்கறத கவனிக்கணும்.






இன்னொரு பக்கத்துலயும் இதே பிராசஸ ரிபீட் பண்றதுக்கு முன்னால, ஹாண்டில் ட்விஸ்ட் ஆகி இல்லாம இருக்கான்னு பாத்துக்கிட்டு ரெண்டு மெயின் துணிக்கு நடுவுல அதை பின் பண்ணுங்க. சீம்ஸ கவனிக்க மறக்காதீங்க.

தைக்கும்போது கூடுதல் சப்போர்ட்டுக்கு, ரெண்டு பக்கத்திலயும் டாப்ல துணிய ஒன்றா சேர்த்து பின் பண்ணுங்க. இப்ப இதுல குறிப்பிட்டிருக்க மாதிரி டாப்-அ சுற்றிலும் நாம தைக்கணும்.

துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அட்ஜஸ்ட் பண்ணி வைச்சிகிட்டு தைக்க ஆரம்பிங்க.








பையோட ஓபனிங்க சுற்றிலும் தையுங்க, அப்றம் ஹான்டில்ஸ் சீம்ஸ் மேல சரியா தைக்கப்பட்டிருக்கான்னு உறுதி செய்துக்கொங்க தையல் பிரியாம இருக்க முடியற இடத்தில ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுங்க. லைனிங் துணில நாம விட்டு வெச்சிருக்க 3 இன்ஞ்ச் இடைவெளிய ஞாபகப்படுத்திக்கொங்க அந்த இடைவெளிய மெயின் செக்ட் துணிய வெளிய கொண்டு வர பயன்படுத்திக்கொங்க இந்த கட்டத்தில கவனமா பொறுமையா இருக்கணும் அப்பதான் தையல் கிழியாம இருக்கும். இப்ப 3 அங்குல இடைவெளிய மூடணும். துணிய பிரஸ்ஸர் ஃபூட் அடியில வைச்சி இந்த இடைவெளிய மூட நேர் தையல் போடுங்க. அந்த இடைவெளியின் ஆரம்பத்துலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட மறக்காதீங்க. இப்ப லைனிங்க துணிக்குள்ள நுழைங்க. இப்ப நாம டாப் ஓபனிங்கை நேர்த்தியாக்கணும். முதல்ல அயர்ன் பண்ணிரலாம்.

ஓபனிங்கை ஃபிளாட்டன் பண்ணி துணிய ஃபிளாட்டன் பண்ண அயர்ன் பண்ணுங்க. பையோட ஓபனிங் முழுக்க இந்த ஸ்டெப்ப ரிபீட் பண்ணுங்க. இன்னும் ஒரே ஒரு ஸ்டெப்தான் இருக்கு. பையோட டாப் ஓபனிங் பக்கத்தை ரைட் சைட் மேல இருக்க மாதிரி பிரஸ்ஸர் பூட்ல வெச்சி மடிப்பு பிரிஞ்சு வராம இருக்க ஓபனிங் முழுக்க டாப் தையல் போடணும்.



அவ்வளவுதான் முடிஞ்சிருச்சு. நாமே தைச்ச பை இப்ப ரெடி. உங்க டோட் பை வெறும் ஸ்டைலிஷா மட்டும் இல்லாம, சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாவும் இருக்கும். இதை நீங்க மளிகை வாங்க அல்லது உங்க கைத்திறமைய ஷோ ஆஃப் பண்ண காலேஜுக்குகூட கொண்டு போகலாம். இதன் சின்ன பாக்கெட் உங்க கண்ணாடிய, சில்லரை காசுகளை அல்லது ஈசியா எடுக்க வேண்டிய எதையும் வெச்சிக்க ரொம்ப சரியான இடமா இருக்கும். உங்களுக்கு இது ரொம்ப பிடிச்சிருக்கும் கமெண்ட் பகுதில உங்க எண்ணத்தை தெரிவியுங்க, அப்புறம் லைக் பண்ண, ஷேர் பண்ண, சப்ஸ்கிரைப் பண்ண மறக்காதீங்க.